# சபை என்பது கிறிஸ்துவின் இராஜ்யமாய் இருக்கின்றதா?

*புதிய ஏற்பாட்டில் சுமார் 48 சதவிகிதமானது இயேசுவின் வாழ்வைப்பற்றி எடுத்துரைக்கின்றது, மற்றும் அதன் 52 சதவிகிதமானது இயேசுவின் வாழ்வு உருவாக்கியதை - சபையை - ப்பற்றி எடுத்துரைக்கின்றது. இயேசு தமது ஊழியக் காலத்தின் பொழுது பரலோக இராஜ்யத்தைப் பற்றி நிலையாகப் பேசினார் (எடுத்துக்காட்டிற்கு மத். 4:17ஐக் காணவும்). பரலோக ராஜ்யம் நிலைநாட்டப்படும் நாளாகிய சபை நிலைநாட்டப்படும் நாளை அவர் சுட்டிக்காட்டினார். அவர் மாறுபட்ட இரண்டு பெயர்களைக் குறிப்பிட்டாரா? அல்லது ஒரே சொற்பொருளை இரு வழிமுறைகளில் அவர் குறிப்பிட்டாரா?*

## தீர்க்கதரிசனத்தில் சபை

ஏசா. 2:2-4ல் “கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதத்தைப்” பற்றிப் பேசப்படுகின்றது. இது தீர்க்கதரிசனத்தில் சபையின் ஒரு சித்தரிப்பாகும். ஏசாயாவின் காலத்தில் சபை இருந்திருக்க முடியாது. அவருடைய தீர்க்கதரிசனத்தின்படி, கர்த்தருடைய ஆலயமானது “கடைசி நாட்களில்” கட்டப்பட வேண்டியதாகவும், எல்லா இனத்தவரும் அதற்குள் வருவதாகவும் இருந்தது. தேவனுடைய ஆலயம் என்பது சபையே ஆகும் (1 தீமோ. 3:15).

இயேசு, “நான் என் சபையைக் கட்டுவேன்” (மத். 16:18) என்று கூறினார். இது, யோவான் ஸ்நானனின் நாட்களில் சபை நிலைநாட்டப்படவில்லை என்பதையும், இயேசு இந்த வார்த்தைகளைக் கூறியபோது அது இருக்கவில்லை என்பதையும் காண்பிக்கின்றது. மத். 18:17ல் சபையானது மறுபடியும் குறிப்பிடப்படுகின்றது. அங்கு இயேசுவால் கொடுக்கப்பட்ட அறிவுரைகள் சபை நிலைநாட்டப்பட்ட பிறகு கடைப் பிடிக்கப்பட வேண்டியவைகளாய் இருந்தன.

புதிய ஏற்பாடு ஒன்று ஏற்படாத வரையிலும் புதிய ஏற்பாட்டின்

*சபையொன்று இருந்திருக்க முடியாது, மற்றும் கிறிஸ்துவின் மரணம் ஏற்படும் வரைக்கும் புதிய ஏற்பாடு (உடன்படிக்கை) ஏற்பட்டிருக்க முடியாது (எபி. 9:16, 17). ஆகையால், கிறிஸ்துவின் மரணம் ஏற்படும் வரையிலும் சபையானது இருந்திருக்க முடியாது.*

*இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக் கேறுதல் ஆகியவற்றிற்குப் பிறகு நாம் அடுத்ததாக அப். 2ல் சபையைப் பற்றி நாம் வாசிக்கின்றோம். இந்த அதிகாரத்தைக் கவனமாய் வாசிப்பதானது அன்றைய நாளில் நடந்த நிகழ்ச்சிகளின் விளைவாக சபை நிலைநாட்டப்பட்டதென்று வெளிப்படுத்துகின்றது. அந்த நாளில், சுவிசேஷமானது முதன் முதலாகப் பிரசங்கிக்கப்பட்டது. இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று மக்களுக்குக் கூறப்பட்டது (அப். 2:38). அந்த நாளில் மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (வ. 41), மற்றும் அதற்குப் பிறகு இரட்சிக்கப்பட்டவர்கள் நாள்தோறும் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (வ. 47).*

*இதன் பிறகு, சபையானது, தீர்க்கதரிசனக் கருத்தில் இனியும் பேசப்படாமல், இருக்கின்ற ஒரு சரீரமாகப் பேசப்பட்டு வருகின்றது. இது ''கடைசி நாட்களில்'' நிலைநாட்டப்படும் என்று ஏசாயா முன்னு ரைத்திருந்தார்; பெந்தெகொஸ்தே நாளின் பிரசங்கத்தில் பேதுரு, அந்த நிகழ்ச்சிகள் யாவும் யோவேலின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாயிருந்தன என்று அறிவித்தார் (வ. 16), இவை யாவும் "கடைசி நாட்களில்" நடக்கும் என்று யோவேல் முன்னுரைத்திருந்தார் (வ. 17). சபையானது கடைசி நாட்களில் நிலைநாட்டப்பட்டது, மற்றும் நாம் இன்னமும் "கடைசி நாட்கள்" என்ற கடைசி யுகத்தின் காலத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மேலும், யோவேலின் கூற்றுப்படி, தேவனுடைய ஆலயமானது எல்லா மக்களினங்களையும் கொண்டதாக இருக்கும். பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு, வாக்குத்தத்தமானது அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த யூதர்களுக்கும் மற்றும் "தூரத்திலுள்ள யாவருக்கும்'' (வ. 39) உண்டாயிருப்பதாகக் கூறினார். எல்லா இனத்தவர்களும் சபையில் தேவனுக்குள் ஒப்புரவாக்கப்படுகின்றார்கள் (எபே. 2:14-16).*

## இராஜ்யத்தின் தொடக்கம்

*இராஜ்யத்திற்குரிய கூற்றுக்கள் சிலவற்றை நாம் இப்பொழுது ஆய்வு செய்வோம்.*

*1. தானியேல் 2:44ல், இராஜ்யமானது ரோம அரசர்களின் நாட்களில் நிலைநாட்டப்பட வேண்டியிருந்ததாக நாம் வாசிக்கின்றோம்.*

*2. யோவான் ஸ்நானன் இராஜ்யம் ''சமீபத்திருக்கிறது'' என்று அறிவித்தார் (மத். 3:2).*

*3. இயேசு தமது சொந்த ஊழியத்தின் போது, இராஜ்யம் ''சமீபித்திருக்கிறது'' என்று கூறினார் (மாற். 1:15; மத். 10:5-7;*

லூக். 10:9ஐக் காணவும்).

4. கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு, சீஷர்கள் அவரிடத்தில் இராஜ்யத்தைப் பற்றி மேலும் கேட்டார்கள். அவர் "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள்" (அப். 1:8) என்று வாக்குத்தத்தம் செய்தார். இது அவர் முன்னமே செய்திருந்த இன்னொரு வாக்குத்தத்தத்தை நமக்கு நினைவூட்டுகின்றது: "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மாற். 9:1).

5. நாம் மறுபடியும் அப். 2ல் ஆவியானவர் வந்த நாளுக்குக் கொண்டு வரப்படுகின்றோம். அப்போஸ்தலர்கள் ஆவியானவரைப் பெற்றபோது அவர்கள் பெலனடைய வேண்டியதாய் இருந்தது (அப். 1:8). இராஜ்யமானது சீஷர்கள் சிலரின் வாழ்நாள் காலத்திலேயே வரவேண்டியதாய் இருந்தது. மேலும், அது பெலத்தோடு வரவேண்டியதாய் இருந்தது (மாற். 9:1). ஆகையால், அப். 2ல் பதிவு செய்யப்பட்டுள்ள படியாக, பெந்தெகொஸ்தே நாளன்று இராஜ்யம் வந்தது. இந்த நாளின் நிகழ்ச்சிகளானவை இராஜ்யம் நிலைநாட்டப்படுதல் பற்றி முன்பு ஏற்படுத்தப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாவற்றிலும் காணப்பட்ட தகுதிகளை நிறைவேற்றின.

## சபை என்பது இராஜ்யமா?

சபையின் தொடக்கம் பற்றிய தீர்க்கதரிசனங்கள் யாவும் அப். 2ன் பெந்தெகொஸ்தே நாளின் போது உச்சத்தை அடைந்தன. இராஜ்யம் நிலைநாட்டப்படுவது பற்றிய தீர்க்கதரிசனங்கள் யாவற்றுக்கும் கூட இது உண்மையாய் இருக்கின்றது. இவ்விதமாகவே நாம் ஒரு முடிவினால் எதிர்கொள்ளப்படுகின்றோம். நாம் பின்வரும் சாத்தியமான இரு முடிவுகளில் ஒன்றை அடைந்தாக வேண்டும்: அந்த நாளில் இரண்டு நிறுவனங்கள் நிலைநாட்டப்பட்டிருக்க வேண்டும், அல்லது தீர்க்கதரினங்கள் ஒரே நிறுவனத்தைக் குறித்திருக்க வேண்டும். நாம் பின்வரும் ஆதாரத்தைக் கவனிப்போம்.

முதலாவது, சபையும் இராஜ்யமும் ஒரே மக்களைக் கொண்டதாக இருந்தது. வெளி. 1:4-6ல் யோவான், ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்கு எழுதினார். இந்த சபைகளின் உறுப்பினர்கள் ஒரு இராஜ்யத்தில் இருந்தார்கள் என்று அவர் கூறினார்.

அடுத்ததாக, நாம் எபி. 12ஐ நோக்குவோம். வசனம் 23 ஆனது, அந்த நிருபத்தை வாசிப்பவர்கள் சபையினிடத்தில் வந்து சேர்ந்ததாகக் கூறுகின்றது. வசனம் 28ஆனது, அவர்கள் ஒரு இராஜ்யத்தைப் பெற்றிருந்ததாகக் கூறுகின்றது.

இயேசு சபையின் தலையாக இருக்கின்றார் என்றும், இராஜ்யத்தின் இராஜாவாயிருக்கின்றார் என்றும் நாம் ஏற்கனவே கண்டிருக்கின்றோம். இருப்பினும், அவர் ஒரே ஒரு சரீரத்தைப் பெற்றுள்ளார் என்று நமக்குக்

*கூறப்பட்டுள்ளது (எபே. 4:4). எனவே இவை இரண்டும் ஒன்றே என்று குறிக்கின்றது, இல்லையென்றால் இரண்டு சரீரங்கள் உள்ளன என்றாகி விடும்.*

*இயேசு, தம்முடைய பந்தியானது இராஜ்யத்தில் ஏற்படுத்தப்படும் என்று முன்னுரைத்தார் (லூக். 22:29, 30). அவர் ஏற்படுத்திய விசேஷித்த இராப்போஜனமானது பிற்பாடு அவரது சீஷர்களால்-சபையில் உள்ளவர்களால் (அப். 20:7; 1 கொரி. 11)-உண்ணப்பட்டது. மறுபடியும் இது சபையே இராஜ்யமாய் இருக்கின்றது என்பதைக் காண்பிக்கின்றது.*

*தேவனுடைய வீட்டாராகிய சபைக்கு (1 பேது. 2:6; 4:17; 1 தீமோ. 3:15) பேதுரு எழுதிய பொழுது, அந்த வீட்டின் உறுப்பினர்கள் மறுபடியும் பிறந்துள்ளதாகக் கூறினார் (1 பேது. 1:23). இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு ஒருவர் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று யோவான் 3:3 காண்பிக்கின்றது. இராஜ்யத்தில் பிரவேசிக்க ஒருவர் மேற்கொள்ளும் செயல்பாடானது சபையின் இந்த உறுப்பினர்களால் பின்பற்றப் பட்டவைகளைப் போன்றதாகவே இருந்தது. இதை இன்னும் அதிகமாய் விவரிப்பதற்கு, ஒருவர் இரட்சிக்கப்படும் பொழுது, அவர் சபையில் சேர்க்கப்படுகின்றார் (அப். 2:47). ஒவ்வொரு பாவியும் இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற வேண்டும் (மாற். 16:16). சபையே இராஜ்யமாய் இருப்பதால், விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவது என்பது தண்ணீரிலும் ஆவியிலும் மறுபடியும் பிறப்பதற்குச் சமமாய் உள்ளது (யோவா. 3:5).*

## *முடிவுரை*

*சபை என்பதே இராஜ்யமாய் இருக்கின்றது. ''சபை'' என்ற வார்த்தையானது உலகிலிருந்து பிரிந்திருக்கும் நிலையை வலியுறுத்துகின்றது. "இராஜ்யம்" என்பது வெளியே அழைக்கப்பட்ட சரீரமானது கர்த்தராகிய இயேசுவால் கட்டுப்படுத்தி ஆளுகை செய்யப்படுவதை வலியுறுத்துகின்றது. அது உலகில் இருந்து வெளியே அழைக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டவர்களால் ஆனதாக உள்ளது. இவர்கள் அதன் குடிமக்களாய் இருக்கின்றார்கள், மற்றும் இவர்கள் அந்தக் குடியுரிமையின் ஈவுகளையும் ஆசீர்வாதங்களையும் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கின்றவர்களாய் இருக்கின்றார்கள்.*